# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8030876

1. District மாவட்டம்: Chennai PS: காவல்நிலையம்: V&AC, CC-IV Year: ஆண்டு: 2018 FIR No. மு.த.அ. எண்: 1/18 Date: நாள்: 20.3.18

2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: P.C. Act Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: (d) of PC Act, 1988.

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 19.3.18 Date to : நாள் வரை 20.3.18

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.15 Hrs Time to : நேரம் வரை 01.30 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.3.18 Time நேரம் 17.30 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.3.18 Time நேரம் 17.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Type written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் O/o the S.R.O, Avadi, ch-54. Apx 20 kms-Northwest.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Subramani (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. Gopal.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் District Inspection cell Officer. (g) Address : முகவரி O/o the Kancheepuram Collectorate, Kancheepuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. R.S. Muthukumar (45), Sub Registrar,
2. Tmt. A. Meenakshi (45), Joint Sub Registrar,
O/o the S.R.O, Old Agraharam st, Avadi, ch-54.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- NO Delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Rs. 85,535 (Rupees eighty five thousand five hundred and thirty five).

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Today on 20.3.2018 at 17.30 Hrs when I was in my office I received a tapal containing complaint and proceedings of the joint surprise check from Tr. K. Subramani, P.A. to collector (L&A) and District inspection cell officer, Kancheepuram & Thiruvallur, o/o the collectorate, Kancheepuram. The complaint and the proceedings run as follows: அனுப்புநர். திரு. கோ. சுப்ரமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நி&நி) & மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (மு.கூ.பொ) (Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

தபாலில் பெறப்பட்டது

[signature] 20/03/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.3.2018 at 18.30 Hrs

Name: பெயர் N. GAJAPATHY
Rank: நிலை DSP No. எண் V&AC CL-IV Alandur, Ch-16.

Continuation of FIR in Cr.No.01/AC/2018/CC-IV (Column -12)

காஞ்சிபுரம். பெறுநர் திரு. என். கஜபதி, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-4, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆய்வு)த்துறை, ந.க.104/2018/ஆ, நாள்.20.03.2018. அய்யா, பொருள் : கூட்டுத் தணிக்கை - இரு துறை கூட்டு திடீர் தணிக்கை திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சார்பதிவாளர் அலுவலகம், கணக்கில் வராத தொகை ரூ. 85,535/- கைப்பற்றப்பட்டது- நடவடிக்கை எடுக்க கேட்டல் - தொடர்பாக. திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பழைய அக்ரஉறாரம் தெரு, பழைய கதவு எண் .86, புதிய கதவு எண்.54, முதல் மாடியில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தை 19.03.2018 அன்று மாலை 7.15 மணியளவில் இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின்போது அலுவலக கணக்கில் வராத தொகை ரூ. 85,535/-, ஆவணம் மற்றும் பதிவேடுகள் கைப்பற்றப்பட்டது. கணக்கில் வராத ரூ. 85,535/- விசாரணை ஆவணங்கள், பதிவேடு நகல்கள் இக்கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை குறிப்பு ஆகியவை மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இன்று (20.03.2018) காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-4, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. அவர்களிடம் ஒப்படைக்கபடுகிறது. இத்தணிக்கை குறிப்பின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். S/d xxx மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நி.எ) & மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர்(மு.கூ.பொ), காஞ்சிபுரம் & திருவள்ளூர் மாவட்டங்கள், காஞ்சிபுரம். இணைப்பு : 1. மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர்(மு.கூ.பொ) காஞ்சிபுரம் & திருவள்ளூர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு- IV, காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில், ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 19.03.2018 அன்று மாலை 7.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டு ஆய்வின் நடவடிக்கைகள். 2. திடீர் ஆய்வின் போது அலுகத்தில் கைப்பற்றபட்ட கணக்கில் வராத ரூ. 85,535/- அடங்கிய சீலிட்ட உறை-1. 3. ஆவடி சார்பதிவாளர் திரு.கே.எஸ்.முத்துகுமார் என்பவரது வாக்குமூலம் (அசலில்). 4. ஆவடி இணைசார்பதிவாளர் திருமதி.அ.மீனாட்சி என்பவரின் வாக்குமூலம் (அசலில்), 5. திரு.சண்முகம் த/பெ. பாலசுந்தரம், 6, விநாயகர் கோவில் முதல் குறுக்கு தெரு, ராஜபாய் நகர், கோவர்த்தனகிரி, ஆவடி என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம் (அசலில்), 6. திரு. சுரேஷ் த/பெ. கஜேந்திரன், 1/122, பெருமாள் கோவில் தெரு, கூடபாக்கம், திருவள்ளூர் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம் (அசலில்) 7. திரு.விஸ்வநாதன், த/பெ புஜ்ஜையா, 9, வடக்கு மாடவீதி, திருநின்றவூர் என்பவரது வாக்குமூலம் (அசலில்), 8, வருகை பதிவேடு 2018 - 4 பக்கங்கள் (நகல்) 9, தாமத வருகை

பதிவேடு 2018 - 4 பக்கங்கள் (நகல்) 10, ரொக்க கையிருப்பு பதிவேடு 2018 - 4 பக்கங்கள் (நகல்), 11. வெளி பணிகள் கவனிப்பு பதிவேடு 2018 - 8 பக்கங்கள் (நகல்). 12. எச் கணக்கு பதிவேடு - 4 பக்கங்கள் (நகல்) 13. அலுவலகத்தில் 19.03.2018 அன்று வரபெற்ற 55+45 காசோலைக்கான விவரப்பட்டியல் நகல் - 2 பக்கங்கள் (சார்பதிவாளர்களால் கையொப்பமிட்டு அளிக்கப்பட்ட பட்டியல்) 14. திரு. கொளஞ்சியப்பா உதவியாளர் வசம் இருந்த ரொக்கம் ரூ. 30,482/-க்கான விவரப்பட்டியல். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வு குழு அலுவலர் மற்றும் சென்னை நகர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு- IV, காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில், பழைய எண். 86, புதிய எண். 54, பழைய அக்ரகாரம் தெரு, ஆவடி, சென்னை - 600 054 முதல் தளத்தில் இயங்கும் ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று 19.03.2018 மாலை 19.15 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் ஆய்வின் நடவடிக்கைகள் பின்வருமாறு: துறைத் தலைமை அலுவலகம்; பதிவுத்துறைத் தலைவர், சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28. ஆய்வில் கலந்து கொண்டவர்கள்: 1) திரு கோ. சுப்பிரமணி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வு குழு அலுவலர், 2) திரு என். கஜபதி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-4, ஆலந்துார், சென்னை-16. 3) திரு ஜெ. உதயசங்கர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-5, ஆலந்துார், சென்னை-16. 4) திரு. வா. பாஸ்கரன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் சிறப்பு பிரிவு-3, ஆலந்துார், சென்னை-16. 5) திருமதி. சி. சுமதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-4, ஆலந்துார், சென்னை-16. ஆய்வின் போது சார்பதிவாளர் திரு. இரா .சு.முத்துக்குமார், இணை சார் பதிவாளர் திருமதி அ.மீனாட்சி, ஆகியோர் அவர்களது இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்து இருந்தனர். உதவியாளர் திரு.இரா. கொளஞ்சியப்பா மற்றும் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி. சொர்ணலதா ஆகிய இருவரும் கணினி அறையில் வடக்கு நோக்கி அவர்களது இருக்கையில் அமர்ந்து இருந்தனர். அலுவலக உதவியாளர்கள் திரு.கோ.சுந்தரமூர்த்தி மற்றும் திரு.க.தியாகராஜன் ஆகியோர் கிழக்கு நோக்கி வாயில் உள்ள பதிவு வைப்பறை அருகே இருந்தனர். திரு. மா. தினேஷ்பாபு, கேமரா ஆப்ரேட்டர் சார்பதிவாளர் இருக்கை எதிரே கணினி அருகே அமர்ந்திருந்தார். அலுவலகத்தின் உள்ளே நாங்கள் குழுவாக

நுழைந்து அலுவலில் இருந்த மேற்படி அலுவலர்களிடம் ஆய்வுக் குழு அலுவலர், குழுவினரை அறிமுகம் செய்து வைத்தும் தங்களது உடைமைகளை சுய சோதனை செய்து காண்பித்து சோதனை ஆரம்பிக்கப்பட்டது. சார் பதிவாளர் திரு. முத்துக்குமார் என்பவரின் மேஜை மீது இருந்த பிளாஸ்டிக் டப்பாவில் இருந்த பணத்தை பற்றி கேட்க அந்த பணம் இன்றைய பதிவுகளுக்காக ரூ.5,376/- உட்பிரிவு ரூ.1,780/-, குறுந்தகடு கட்டணம் ரூ.1,750/- மற்றும் குறைவு முத்திரை தீர்வை ரூ.2,340/-, என வசூல் செய்தவை என்று கூறி ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூபாய் 11,246/- இருந்தது (2000X1=2,000/-, 500X15=7,500/-, 200X1=200, 100X11=1,100/-, 50X7 = 350/-, 20X2=40/-, 10X4=40/-, மற்றும் சில்லரை நாணயங்கள் ரூபாய் 16/-) சரியாக இருந்தது. மேலும், பதிவு கட்டணம், குறைவு முத்திரை தீர்வை மற்றும் உட்பிரிவு கட்டணம் என 55 வரைவோலைகள் ரூ. 28,15,005/- ஆஜர் செய்தார். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்ததால் மேற்படி பணம் மற்றும் வரைவோலைகளை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இணை சார்பதிவாளர் திருமதி. மீனாட்சி என்பவரின் மேஜை மீது இருந்த பிளாஸ்டிக் டப்பாவில் இருந்த பணத்தை பற்றி கேட்க அந்த பணம் இன்றைய பதிவுகளுக்காக ரூ.4,501/-, உட்பிரிவு ரூ.1,550/-, பிரிவு 41 கட்டணம் ரூ. 1,489/-, குறுந்தகடு கட்டணம் ரூ.1,750/- என வசூல் செய்தவை என்று கூறி ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூபாய் 9,290/- இருந்தது (2000X1=2,000/-, 500X10=5,000/-, 200X2=400 100X17=1,700/-, 50X3 = 150/-, மற்றும் சில்லரை நாணயங்கள் ரூபாய் 40/-) சரியாக இருந்தது. மேலும், பதிவு கட்டணம் மற்றும் பிரிவு 41 கட்டணமென மொத்தம் 45 வரைவோலைகள் ரூ.10,64,831/-க்கு பெற்றதாக கூறி ஆஜர் செய்ததும் சரியாக இருந்தது. மேற்படி பணம் மற்றும் வரைவோலைகளை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. கணினி அறையில் இருந்த உதவியாளர் திரு. ஆர்.கொளஞ்சியப்பா என்பவருக்கு முன்பிருந்த சிகப்பு நிற பிளாஸ்டிக் டப்பாவில் இருந்த பணத்தை பற்றி கேட்கும் போது வில்லங்க மனு கட்டணம் ரூ.52/-, வில்லங்க தேடுதல் கட்டணம் ரூ.23,610/-, நகல் கட்டணம் ரூ.920/-, கணினி கட்டணம் ரூ.5,200/-, இந்து திருமணம் கட்டணம் ரூ.340/-, தமிழ்நாடு திருமணம் ரூ. 360/-, இணக்க கட்டணம் ரூ. 50/-, ஆகியவர்களுக்காக வசூல் செய்யப்பட்டது என்று கூறி ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூபாய் 30,532/- இருந்தது (2000X2=4,000/-, 500X43=21,500/-, 100X49=4,900/-, 20X1 = 20/-, 10X5=50, மற்றும் சில்லரை நாணயங்கள் ரூபாய் 12/-) சரியாக இருந்தது. மேற்படி பணத்தை அவரிடமே

திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளர்கள் அலுவலக இருக்கை மற்றும் கணினி அலுவலக இடையே சார்பதிவாளர் இருக்கையை ஒட்டி தெற்கே கிழக்கு நோக்கி வாயிற்படி உள்ள பதிவு வைப்பு அறையில் (Record Room) உள்ளே சென்று பார்த்த போது நுழை வாயிலுக்கு எதிரே சற்று வடமேற்கே உள்ள முதல் காண்கிரிட் தூண் மற்றும் பதிவேடுகள் வைக்கபட்டுள்ள ஸ்டீல்ரேக் இடையே சிதறி கிடந்தும் ஆங்காங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்க்க மொத்தம் ரூபாய் 85,535/- இருந்தது. (2,000X26=52,000/-, 500X55=27,500/-, 200X2=400/-, 100X55=5,500/-, 50X1= 50/-, 20X2 = 40/-, 10X4=40/-, 5X1 =5/-). மேற்படி, பணம் குறித்து அலுவலகத்திலிருந்த சார்பதிவாளர் திரு. இ.ரா. சு.முத்துக்குமார், திருமதி. அ. மீனாட்சி மற்றும் பணியிலிருந்த இதர அலுவலர்களிடம் விளக்கம் கேட்க யாரும் உரிய விளக்கம் அளிக்காமலும் மேற்படி பணத்தைப் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என கூறி யாரும் உரிமை கோர முன்வராததால் மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.85,535/-த்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், சார்பதிவாளர் திரு. முத்துக்குமார் என்பவரது சொந்த பணம் குறித்து விசாரிக்க தான் ரூ.3,000/-யுடன் அலுவலகம் வந்ததாகவும், செலவு போக மீதம் ரூ.1,300/- கைவசம் உள்ளதாக ஆஜர் செய்தார். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், திருமதி. மீனாட்சி என்பவரது சொந்த பணம் குறித்து விசாரிக்க தான் ரூ.1,500/-யுடன் அலுவலகம் வந்ததாகவும், செலவு போக மீதம் ரூ.1,300/- கைவசம் உள்ளதாக ஆஜர் செய்தார். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், உதவியாளர் திரு. கொளஞ்சியப்பா என்பவரது சொந்த பணம் குறித்து விசாரிக்க தான் ரூ.300/-யுடன் அலுவலகம் வந்ததாகவும், செலவு போக மீதம் ரூ.200/- கைவசம் உள்ளதாக ஆஜர் செய்தார். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலக உதவியாளர் திரு. தியாகராஜன் என்பவரது சொந்த பணம் குறித்து விசாரிக்க தான் ரூ.150/-யுடன் அலுவலகம் வந்ததாகவும், செலவு போக மீதம் ரூ.80/- கைவசம் உள்ளதாக ஆஜர் செய்தார். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், கேமரா ஆப்ரேட்டர் திரு. மா. தினேஷ் பாபு மற்றும் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர், திருமதி. சொர்ணலதா ஆகியோரிடம் சொந்த பணத்தைப் பற்றி கேட்க தங்களிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தனர். மேலும்,

அலுவலகத்தின் வாயில் அருகே இருந்த திரு. B. சண்முகம், ஆ/வ/51, த/பெ. பாலசுந்தரம், எண். 6, விநாயகர் கோயில் தெரு, முதல் குறுக்கு தெரு, ராஜ்பாய் நகர், கோவர்த்தனகிரி, ஆவடி, சென்னை -71 என்பவரிடம் விசாரணை செய்ய அவரிடம் ரூ.17,300/- இருப்பதாகவும், மேற்படி பணம் பாக்கம் அருகில் உள்ள லேஅவுட்டில் பணிபுரியும் ஆட்களுக்கு கூலி பட்டுவாடா செய்ய வைத்திருப்பதாகவும், தெரிவிக்க, அவரது விளக்கத்தை ஏற்று மேற்படி பணத்தை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தில் உள்ளே இருந்த திரு. ஜி. சுரேஷ், ஆ/வ/35, த/பெ. கஜேந்திரன், எண். 1/122, பெருமாள் கோயில் தெரு, கூடப்பாக்கம், திருவள்ளூர் என்பவரிடம் விசாரணை செய்ய அவரிடம் ரூ.40,000/- இருப்பதாகவும், மேற்படி பணத்தை காலி மனை விற்பனைக்கு புரோக்கர் தொழில் செய்வதின் மூலம் கிடைத்த பங்கு பணம் என்றும் தெரிவித்தார். மேலும் சாட்சி கையெழுத்து இட சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கத்தை ஏற்று மேற்படி பணத்தை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தில் உள்ளே இருந்த திரு. கே. விஸ்வநாதன், ஆ/வ/67, த/பெ. புஜ்ஜையா, எண். 9, வடக்கு மாடவீதி, திருநின்றவூர், இவரை விசாரிக்க இவர் தனது நிலத்தை விற்பனை செய்ய வேண்டி இங்கு அலுவலகம் வந்ததாகவும், அதற்காக பத்திர தொகை ரூ.50,000/- வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கத்தை ஏற்று மேற்படி பணத்தை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், 1. வருகை பதிவேடு, மார்ச் 2018 (பக்கம் 1 முதல் 4 வரை) 2. தாமத வருகை பதிவேடு 13/3 முதல் 19/3 வரை (பக்கம் 1 முதல் 4 வரை) 3. 2018 ரொக்க இருப்பு பதிவேடு 16/3 மற்றும் 19/3 (பக்கம் 1 முதல் 4 வரை) 2018 4. வெளி வேலை இருப்புப் பதிவேடு 3.1.14 முதல் 09.03.18 வரை (பக்கம் 1 முதல் 8 வரை) 5. H தொகுதி எண். 12 கணக்கு 10.03.2018 முதல் 19.03.2018 வரை (1 முதல் 4 பக்கம்) உள்ளதின் நகல்கள் சார்பதிவாளரிடம் அத்தாட்சி செய்து பெறப்பட்டது. 6. இணை சார்பதிவாளர் பெற்ற 45 வரைவோலைகள் ரூ.10,64,831/-க்கான கைப்பட எழுதிய விவரம் (1 பக்கம்) இணை சார்பதிவாளரிடம் அத்தாட்சி செய்து பெறப்பட்டது. 7. சார்பதிவாளர் பெற்ற 55 வரைவோலைகள் ரூ. 28,15,005/- க்கான கைப்பட எழுதிய விவரம் (1 பக்கம்) சார்பதிவாளரிடம் அத்தாட்சி பெறப்பட்டது. 8. உதவியாளர் திரு. கொளஞ்சியப்பா என்பவரிமிருந்து அவர் வசூல் செய்த தொகை ரூ.30,532/-க்கான கைப்பட எழுதிய விவரம் (1 பக்கம்) மேற்படி உதவியாளரிடம் அத்தாட்சி செய்து பெறப்பட்டது. மேலும், சார்பதிவாளர்

திரு. முத்துக்குமார், இணை சார்பதிவாளர் திருமதி. மீனாட்சி மற்றும் தனி நபர்கள் திரு. விஷ்வநாதன், திரு. சுரேஷ் மற்றும் திரு. சண்முகம் ஆகியோர்களை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைகள் 20.03.2018 தேதி 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது. S/dxxx(கோ. சுப்பிரமணி), காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வு குழு அலுவலர், S/dxxx (நா.கஜபதி) காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-4, ஆலந்தூர், சென்னை-16, S/dxxx (ஜெ.உதய சங்கர்) காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-5, ஆலந்தூர், சென்னை-16. S/dxxx (சி. சுமதி) காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு -4, ஆலந்தூர், சென்னை-16. S/dxxx (வா. பாஸ்கரன்), காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகர சிறப்புப் பிரிவு -3, ஆலந்தூர், சென்னை-16.

Sir, Received the above complaint and registered a case in V&AC, CC-IV, Cr.No.1/AC/2018/CC-IV U/s 102 Cr.PC & 13(2) r/w 13 (1) (d) of PC Act, 1988 on 20.03.2018 at 17.30 hrs, (Sd.xxx, DSP, V&AC, CC-IV, Chennai-16).

The original FIR along with complaint and joint Surprise Check Proceedings, Seized Amount of Rs. 85,535/-, Statements and Records are submitted before the Hon'ble Chief Judicial Magistrate Cum Special Judge, Thiruvallur and other copies forwarded to Officers concerned.

20/03/2018

(N. GAJAPATHY)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti - Corruption,
Chennai City-IV Detachment,
Alandur, Chennai-16.